தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2015**

**D031** இலக்கணம் – 4 (யாப்பு, அணி)

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. தொல்காப்பியர் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகள் எத்தனை?
2. முழுமையாகக் கிடைக்கும் தனி யாப்பிலக்கண நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. ‘நேரசை’ எத்தனை அலகுகளைக் கொண்டிருக்கும்?
4. ‘சீரடி’ எத்தனை வகைப்படும்?
5. மூன்றடியால் ஆகிய வெண்பாவின் பெயரைக் குறிப்பிடுக.
6. கலிப்பாவுக்கு உரிய ஓசை யாது?
7. ஆசிரிய விருத்தம் எவ்வடிகளால் ஆகியது?
8. பட்டினப்பாலை எவ்வகைப் பாவால் எழுதப்பட்டது?
9. மாறனலங்காரம் கூறும் பொருள் அணிகள் எத்தனை?
10. செய்யுள்நெறியின் இருவகைகள் யாவை?
11. ‘சந்திராலோகம்’ – நூலின் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுக.
12. ‘குளகச் செய்யுள்’ இடம்பெறும் நூல் ஒன்றினைக் குறிப்பிடுக.
13. உவமை அணியிலிருந்து தோன்றிய முதல் அணி யாது?
14. ஒட்டு அணியின் வேறுபெயர் இரண்டினைக் குறிப்பிடுக.
15. அதிசய அணி எத்தனை வகைப்படும்?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. 'நேரசை' – சான்றுடன் விளக்கியுரைக்க.
2. எழுவகைத் தளைகள் யாவை?
3. 'பஃறொடை வெண்பா' – சான்று தந்து விளக்குக.
4. மருட்பாவின் பொது இலக்கணம் எழுதுக.
5. அணி இலக்கணம் கூறும் ஐந்திலக்கண நூல்கள் யாவை?
6. வைதருப்பநெறி கூறும் சொல்லின்பத்தை விளக்குக.
7. பின்வருநிலை அணியினைச் சான்று தந்து விளக்குக.
8. உருவக அணியின் இலக்கணத்தை ஒரு சான்றுடன் விளக்குக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சீர்வகை அடிகளைச் சான்றுகளுடன் விரிவாக விளக்கி ஆராய்க.

(அல்லது)

(ஆ) தொடைவிகற்பங்கள் மொத்தம் எத்தனை? மோனை, எதுகைத் தொடை விகற்பங்களை விவரிக்க.

2. (அ) ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறி, அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொடர்நிலைச் செய்யுள் பற்றித் தண்டியலங்காரம் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

3. (அ) 'ஏது' அணியின் இலக்கணத்தைக் கூறி அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'சிலேடை' அணியின் இலக்கணத்தையும் அதன் வகைகளையும் விவரித்து எழுதுக.

***